

சிவகங்கை மாவட்டத்தில் நடைபெறும் அரசு மற்றும் கழகத்தின் பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காக கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னையில் இருந்து விமானம் மூலம் திருச்சி விமான நிலையம் வந்தடைந்தார். திருச்சி வந்தடைந்த முதல்வருக்கு கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு தலைமையில், திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளரும், பள்ளி கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி முன்னிலையில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

## தருமபுரி மேற்கு மாவட்டம்

# காரிமங்கலம் மத்திய ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு!

தருமபுரி மேற்கு மாவட்டம், காரிமங்கலம் மத்திய ஒன்றியச் செயலாளர் எல்.கிருஷ்ணன் அவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **ர.கண்ண பெருமாள்** (சீகலஅள்ளி, அரியான்கொட்டாய் கிராமம், முக்குளம் அஞ்சல், காரிமங்கலம் வட்டம், தருமபுரி மாவட்டம் - 635 111) அவர்கள் காரிமங்கலம் மத்திய ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 20.01.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழியில்

# கேரள அரசும் யு.ஜி.சி. வரைவறிக்கைக்கு எதிராகத் தீர்மானம்!

### மாநில உரிமைகளைக் காக்க ஓரணியில் நாம் திரள்வது காலத்தின் கட்டாயம்! அமைச்சர் கோவி.செழியன் அறிக்கை!

**சென்னை, ஜன. 22 -**

**“தமிழ்நாடு முதலமைச்சரின் வழியில் கேரள அரசும் UGC வரைவறிக்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றி உள்ளது. மாநில உரிமைகளைக் காக்க நாம் ஓரணியில் திரண்டு நிற்க வேண்டியது காலத்தின் கட்டாயம்!” என்று உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.**

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

மக்களாட்சியையும் மாநிலங்களின் கல்வி சுயாட்சியையும் சிதைக்க நினைக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசிற்கு எதிராக ஒன்றாக நின்று போராட வேண்டிய நேரமிது. மாநில அரசு இதுவரை உருவாக்கி வளர்த்து வைத்துள்ள பல்கலைக் கழகங்களை எல்லாம் பல்கலைக் கழக நிதி நல்கைக் குழு (UGC) வாயிலாகக் கைப்பற்றி, நமது கல்வி வளர்ச்சியைத் தடுக்க முயல்கிறது மோடி அரசு.

‘மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசு உருவாக்கிய பல்கலைக் கழகங்கள் மீது மாநில அரசுக்கே எந்த உரிமையையும் கிடையாது’ எனக் கூறுவது சர்வாதிகார ஆணவம் அன்றி வேறென்ன? மாநில அரசுகளை மிரட்டிப் பார்க்கும் ஆதிக்க நடவடிக்கை இது.

**ஒன்றிய அரசின் கைப்பாவையான யு.ஜி.சி.!**

கல்வி சார்ந்த உரிமைகள் அரசியலமைப்பின் ஒத்திசைவுப் பட்டியலில் (Concurrent) உள்ள போது மாநில அரசுகளை கலந்தாலோசிக்காமல், தன்னிச்சையாக UGC அறிவிப்பை வெளியிட்டிருப்பது, அதன் அதிகார வரம்பை மீறிய அத்துமீறல் நடவடிக்கை. கல்வி சார்ந்த வழிகாட்டிகளை வழங்கக் கூடிய UGC ஒன்றிய அரசின் கைப்பாவையாக மாறியிருக்கிறது.

ஒன்றிய அரசின் UGC விதிகளை ஏற்காவிட்டால், மாணவர்கள் கஷ்டப் பட்டுப் படித்து வாங்கும் பட்டங்கள் செல்லாது; யு.ஜி.சி. திட்டங்களில் பங்கேற்க முடியாது; பல்கலைக் கழகங்களின் சட்ட அங்கீகாரம் செல்லாது என்றெல்லாம் யு.ஜி.சி. அறிவித்திருப்பது நேரடியாய் தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வி மீது தொடுக்கப்பட்ட போர்.



**உருட்டல் மிரட்டல்களுக்கு திராவிட மாடல் அரசு அஞ்சாது!**

மோடி அரசின் உதய் மின் திட்டத்தில் கையெழுத்திட வேண்டும் என மிரட்டியபோது முந்தைய அ.தி.மு.க. அரசு கையெழுத்திட்டது. அதன் விளைவுகளை இப்பொழுது சந்தித்துக் கொண்டிருக்கி றோம். தேசியக் கல்விக் கொள்கையில் கையெழுத்திடாவிட்டால் நிதி தர மாட்டோம் என விதிகளை வகுக்கிறார்கள்.

இந்த மிரட்டல் உருட்டல்களுக்கெல்லாம் ஒருநாளும் திராவிட மாடல் அரசு அஞ்சாது! பழைய வரலாறுகளைப் புரட்டிப் பார்ப்பவர்களுக்கு இது தெரியும்.

துணை வேந்தர் நியமனத்தில் மாநில அரசின் உரிமையை மறுப்பதோடு கல்வியாளர் அல்லாதவர்களைத் துணை வேந்தர்களாக நியமிக்கலாம் என்றும் தனது அடிப்படை கல்வித் தகுதியிலிருந்து மாறுபட்ட பாடத்தில் முனைவர் பட்டமோ அல்லது NET/ SET தகுதி பெற்றவர்களோ பேராசியர்கள் ஆகலாம் என யு.ஜி.சி. வரைவறிக்கை தெரிவித்திருப்பது கல்வித் துறையைச் சீரழித்து மாணவர்களின் கல்விக் கனவைப் பாழாக்கி விடும். இதன் ஆபத்தை உணர்ந்து தான் முதலமைச்சர் அவர்கள் இந்த வரைவறிக்கைகளை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் எனச் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறை வேற்றினார். ஒன்றிய கல்வித்துறை அமைச்சருக்குக் கடிதமும் எழுதினார்.

**தமிழ்நாட்டின் கல்வி மீது ஒன்றிய அரசின் தாக்குதல்!**

ஒன்றிய பா.ஜ.க. அரசின் இந்த செயல் தமிழ்நாட்டின் கல்வி மீது தொடுத்திருக்கும் தாக்குதல் மட்டுமல்ல, தனித்துவமான இந்திய மாநிலங்கள் அனைத்தின் மீதான தாக்குதல். அதனால்தான் நமது முதலமைச்சர் அவர்கள், “பா.ஜ.க. அல்லாத மாநில முதல்வர்கள் தமிழகத்துடன் இணைந்து இந்த அடக்குமுறை நடவடிக்கைகளை நிராகரித்து சட்டமன்றத்தில் தீர்மானங்களை நிறைவேற்ற வேண்டும். மாநிலங்கள் ஒன்றிணைந்து, நமது கல்வி நிறுவனங்களின் மீதான மாநில உரிமையை மீட்டெடுக்க வேண்டும்” என்று கடிதம் வாயிலாக கேட்டுக்கொண்டார். அதன்படியே இன்று கேரள அரசும் UGC வரைவறிக்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றி உள்ளது. அனைத்து மாநிலங்களும் மாநில உரிமைகளை காக்க ஓரணியில் திரண்டு நிற்க வேண்டியது காலத்தின் கட்டாயம்.

**சர்வாதிகாரச் செயலை கிள்ளி எறிய வேண்டும்!**

விஷ செடியையும், விஷம செயலையும் முளையிலேயே கிள்ளி எறிதல் அவசியம். அப்படியே மோடி அரசிற்கு உட்பட்ட UGCயின் இந்த சர்வாதிகார செயலையும் நாம் முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும்.

மாநில அரசுகளின் அதிகாரத்தை நீக்கி கூட்டாட்சிக்குக் குழி பறிக்கும் UGC வெளியிட்ட வரைவு அறிக்கையை உடனடியாக திரும்பப் பெற வேண்டும். இதனைத் திரும்பப் பெறும் வரை திராவிட மாடல் அரசும், தமிழ்நாட்டு மக்களும் தங்களது எதிர்ப்பில் இருந்து ஒரு நொடியும் பின் வாங்க மாட்டார்கள். மாநில உரிமைகளைப் பறிக்க நினைக்கும் மோடி அரசிற்கு எதிராக ஒன்றுபடுவோம். மீட்டெடுப் போம் நமது கல்வி உரிமையை... நிலைநாட்டு வோம் மாநில சுயாட்சியை!

இவ்வாறு அமைச்சர் கோவி.செழியன் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

## வணிகர் நல வாரியத்தில் உறுப்பினராக இருந்து மறைந்த

# 2 வணிகர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.3 லட்சம் குடும்ப நலநிதி!

### அமைச்சர் பி.மூர்த்தி வழங்கினார்!

*சென்னை, ஜன. 22 - வணிகர் நல வாரியத்தில் உறுப்பினராக இருந்து மறைந்த இரண்டு வணிகர்களின் குடும்பத்தினர்களுக்கு குடும்ப நல நிதி உதவியாக தலா ரூ.3,00,000/க்கான காசோலைகளை வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி மூர்த்தி, வழங்கினார்:*

*வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தலைமையில் நேற்று (21.01.2025) சென்னை, நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி (ம) பதிவுத்துறை அலுவலகக் கூட்டரங்கில் 2024ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்கான அனைத்து இணை ஆணையர்களின் பணித்திறன் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.*

*இக்கூட்டத்தில் மறைந்த இரண்டு வணிகர்களின் குடும்பத்தினரான திருத்துறைப்பூண்டியைச் சார்ந்த திருமதி. ரா.பவானி மற்றும் சேலத்தை சார்ந்த திருமதி. மே.உஷா ஆகியோருக்கு தமிழ்நாடு வணிகர் நல வாரியம் சார்பாக குடும்ப நல நிதி உதவித் தொகை தலா ரூ.3,00,000/க்கான காசோலைகளை அமைச்சர் பி.மூர்த்தி வழங்கினார்.*

*மேலும் அனைத்து இணை ஆணையர்களும் தங்கள் சம்பந்தப்பட்ட பகுதிகளில் உள்ள வணிகர்கள் குறிப்பிட்ட தேதிக்குள் ஜிஎஸ்டி தாக்கல் செய்வதை உறுதி செய்தல், உள்ளீட்டு வரி வரவு (ITC) மனுக்களின் உண்மைத் தன்மையை ஆராய்ந்து தவறுகள் ஏதும் நடக்காமல் கண்காணித்தல், சரக்கு போக்குவரத்து வாகனங்களை சோதனை செய்து EWay Bill உள்ளிட்ட ஆவணங்களை சரிபார்த்து உரிய நடவடிக்கை எடுத்தல், அரசுத் துறைகள் GSTR 7 படிவங்கள் தாக்கல் செய்வதை உறுதி செய்தல், போன்ற பணிகளை சிறப்பாக மேற்கொண்டு அரசுக்கு வரி வருவாய் ஈட்டித் தர ஆக்கபூர்வமாக செயல்பட வேண்டும் என அமைச்சர் பி.மூர்த்தி அறிவுறுத்தினார்.*

*இக்கூட்டத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் பிரஜேந்திர நவ்நீத், வணிகவரித்துறை ஆணையர் முனைவர் டி. ஜகந்நாதன் மற்றும் வணிகவரித் துறை உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பி.ஏ. சாமிநாதன்
### சனவரி 22 (2011)



**மாணவப் பருவத்தில் “தமிழ்மன்றம்” என்ற அமைப்பினை தனது பகுதியில் துவக்கிய இவர், அப்போதிலிருந்தே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டார்.**

**ஒன்றுபட்ட கோவை மாவட்டக் கழகச் செயலாளராகப் பணியாற்றிய இவர், 1975இல் கோவையில் நடைபெற்ற தி.மு.க. மாநில மாநாட்டினை சிறப்பாக நடத்தினார்.**

**1958ல் புளியம்பட்டி ஊராட்சி மன்றத் தலைவராகவும் – 1967ல் கோபிச்செட்டிபாளையம் நாடாளுமன்றத் தொகுதியில் காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான சி. சுப்பிரமணியத்தை எதிர்த்து, கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அதே தொகுதியில் 1971ல் ஈ.வி.கே. சம்பத்தை எதிர்த்துப் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதியில் உள்ள ஏழையெளிய மக்களின் நன்மதிப்பைப் பெற்றார்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றார். குறிப்பாக நெருக்கடிகால மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## அருப்புக்கோட்டை

# வழக்கறிஞர் க.முனீஸ்வரன் மறைவு!

### கழக சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர். இளங்கோ இரங்கல்!

*சென்னை, ஜன.22-*

*விருதுநகர் தெற்கு மாவட்டம், அருப்புக் கோட்டையைச் சேர்ந்த வழக்கறிஞர் க.முனீஸ்வரன் மறைவுற்ற செய்தி அறிந்து கழக சட்டத்துறை செயலாளர் என்.ஆர்.இளங்கோ இரங்கல் தெரிவித்துள்ளார்.*

*இதுகுறித்து அவரது இரங்கல் செய்தி வருமாறு:-*

*விருதுநகர் தெற்கு மாவட்டம் அருப்புக்கோட்டையைச் சேர்ந்த வழக்கறிஞர் க.முனீஸ்வரன் நேற்று முன்தினம் (20.01.25) காலை அவரது இல்லத்தில் மறைவெய்தினார் என்ற செய்தி அறிந்து மிகுந்த வேதனையும், அதிர்ச்சியும் அடைந்தேன்.*

*அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் கழக சட்டத்துறையின் சார்பில் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறேன்.*

*இவ்வாறு மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ தெரிவித்துள்ளார்.*

## இளையான்குடி வடக்கு ஒன்றிய கழகத்தின் சார்பில்

# பொங்கல் விழா கழகக் கொடியேற்றம்!

### தமிழரசி எம்.எல்.ஏ. பங்கேற்பு!


சிவகங்கை, ஜன. 22 –

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி வடக்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் தமிழர் திருநாளை முன்னிட்டு பொங்கல் விழா செந்தமிழ்நகர், மாதவநகர், தாயமங்கலம் ஆகிய கிராமங்களில் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. பொங்கல் வழங்கி தூய்மை பணியாளர்களுக்கு புத்தாடைகளை வழங்கினார் . முன்னாள் எம்.எல்.ஏ. வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் சுப.மதியரசன் தலைமையில் நிகழ்ச்சி நடைபெற்றது .

இந்த விழாவில் நிர்வாகிகள் விவசாய அணி காளிமுத்து கூட்டுறவு சங்க தலைவர் சுப.தமிழரசன், ச.குழந்தை பாண்டியன், இபுராகிம்ஷா, மு.சத்தியேந்திரன், பஞ்சவர்ணம், இந்திரா தேவி, கா.முத்துராமலிங்கம், தகவல் தொழில்நுட்ப அணி கண்ணன் உட்பட ஊராட்சி கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா சோம. திருநாவுக்கரசு
### சனவரி 22 (2014)



**பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரது பேச்சாற்றலைக் கேட்டு கழகத்தில் இணைய வேண்டும் என்று முடிவெடுத்து கழகத்தில் உறுப்பினராகச் சேர்ந்தார்.**

**நெல்லை மாவட்டத்தில் பொதுக்குழு உறுப்பினர் – மாவட்டப் பொருளாளர் ஆகிய பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**நெல்லை நகர் மன்ற உறுப்பினராகப் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றதுடன், கூட்டுறவு வங்கி, அர்பன் வங்கி ஆகியவற்றில் இயக்குநராகவும் பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களில் கலந்து கொண்டதோடு, மொழிப் போராட்டத்தில் பங்கு பெற்று சிறையில் அடைக்கப்பட்டார். ‘மிசா’ சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு ஓராண்டு காலம் சிறைவாசம் அனுபவித்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**